சித்தர் வெண்பா

பதிப்பு

இரா. அன்பழகன், எம்.ஏ.,

நெறியாளர்

முனைவர் ய.மணிகண்டன்

விரிவுரையாளர்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005.

மே - 2006

சித்தர் வெண்பா

சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு
இரா. அன்பழகன், எம்.ஏ.,

நெறியாளர்
ய. மணிகண்டன்
விரிவுரையாளர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
மே 2006

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

நெறியாளர் சான்றிதழ்

முனைவர் ய. மணிகண்டன்,
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சித்தர் வெண்பா' எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயம் பெறுவதற்காக **இரா. அன்பழகன்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர் தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(முனைவர் ய. மணிகண்டன்)

நாள் :
இடம்: சென்னை -5.

பதிப்பாளர் உறுதிமொழி

இரா. அன்பழகன்,
முதுகலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சுவடியியலும் பதிப்பியலும்' என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **'சித்தர் வெண்பா'** எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்,

(இரா. அன்பழகன)

நாள் :
இடம்: சென்னை -5.

உள்ளடக்கம்

	பக்கம்
பதிப்புரை	VI - XIII
நன்றியுரை	XIV-XV
சித்தர் வெண்பா	1-34
பின்னிணைப்பு	
1. சொல்லடைவு	35
2. செய்யுள் முதற்குறிப்பகராதி	50
துணைநூற்பட்டியல்	

பதிப்புரை

சித்தர்கள் என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர்கள் என்பது பொருள். அதாவது வீடுபேறு அடைந்தவர்கள் என்றே கூறலாம். இந்த உடல் இருக்கும்போதே முத்தி அடைந்தவர்களை ஜீவன் முத்தர்கள் என்று அழைப்பர். சித்தன் வாழ்வு என்பது முருகப் பெருமானது கோயில் தமிழகத்தில் திருவாவினன் குடிக்கு முற்காலத்தில் சித்தன் வாழ்வு என்று பெயர் இருந்தது. திருமுருகாற்றுப்படை வரையில் திருவாவினன் குடியைப் பற்றிக் கூறுமிடத்து நச்சினார்க்கினியர் சித்தன் வாழ்வென்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து ஆவினன்குடியென்ற பெயர் பெற்றது என்கின்றார்.

ஔவையார் சித்தன் வாழ்வு மூன்றெறியுடைத்து என்று கூறுகிறார். எல்லாம் வல்ல சித்தனாகச் சிவபெருமான் திருவிளையாடல் புரிகின்றார் என்று புராணங்கள் கூறுகின்றன. கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் என்றும் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும் தேவாரம் வேறுபடுத்திக் கூறுகிறது.

அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள் அனுவைப் போல் சிறியதாக மாறுதல் - அணிமா, மேருவைப் போல் பெரியதாக மாறுதல் - மகிமா, காற்றைப் போல் லேசாதல் - இலகுமா, பொனர் போலப் பருவாதல் - கரிமா, எல்லாவற்றையும் ஆளுதல் - பிராப்து, எல்லாவற்றையும்

வசப்படுத்துதல் - வசித்துவம், கூடுவிட்டு கூடுபாய்தல் - பிரகாமியம், விரும்பியதை எல்லாம் செய்து முடித்து அனுபவித்தல் - ஈசத்துவம் என்ற எட்டு வகைப்பெறும் பேறுகளை அட்டமா சித்திகள் என்பர். சித்தர்களுக்கு சாதி, சமய, பேதம் எதுவும் இல்லை. அவர்கள் எல்லா உயிர்களிலும் இறைவனைத் தரிசிப்பவர்கள்.

மருந்து இருவகைப்படும். அவை அகமருந்து, புறமருந்து என்பன. அகமருந்து என்பது உள்ளுக்குச் சாப்பிடுவதும், புறமருந்து என்பது உடலின் மேல் பூசி உபயோகிப்பதும் ஆகும். மருந்து உடலில் உண்டாகும் நோய்களைத் தீர்ப்பதற்கு உதவுகின்றது. மேற்கண்ட மருந்துகள் மருத்துவர்களால் கையாளப்படுகின்ற முறைகளாகும்.

மனிதனுக்கு ஏற்படுகின்ற எல்லா இடையூறுகளுக்கும், சஞ்சலத்திற்கும், பிணிகளுக்கும் எண்ணிய எண்ணங்களை முடிப்பதற்கும் அதாவது நிறைவேற்றுவதற்கும் சித்த வித்தையாக மருந்து பயன்படுகிறது. மேலும் இம்மருந்து பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்பதைத் தீர்க்க செல்வம் தழைப்பதற்கும், தீராதவினைகளைத் தீர்ப்பதற்கும், ஆசைகளுக்கு எல்லாம் முக்கியமானவைகளான மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை என்றும் பொன்னாசை என்றும் முதலியவைகளை எல்லாம் தீர்ப்பதற்கும் உதவுகிறது.

இம்மருந்து சுகம் தரும் வைத்திய மருந்து என்றும்

யார்க்கும் பேசப்படாத பெரிய மருந்து என்றும் போற்றப்படுகிறது. சித்த வித்தை சாகாக் கல்வியாகும்.

சித்தர்களின் பாடல்கள் தத்துவநிலை பற்றி பேசுகிறது அதுமட்டுமின்றிமனிற் வேற்று நாடுகளில் மெய்யுணர்வாளர்களான வங்க தேசத்தில் பவுல் பாலர்கள் (Bauls of Bengal), புத்த மதத்தைச் சேர்ந்த தோஷாக்கள் (Buddhist Dohas) தெலுங்கு தேசத்தின் வேமனா, வடஇந்திய மெய்யுணர்வாளரான கபீர் போன்றவர்களின் சிந்தனையோடு தமிழ்ச் சித்தர்களின் சிந்தனையையும் ஒப்பிட்டு நோக்கும் வகையில் அமைகிறது. உடல் பற்றிய அவர்களது கொள்கையும் திருமூலர் கூறுகின்றார். பாரியங்கு யோகமும் ஒன்றாகிறது.

சித்தர்கள் தங்கள் தலைகளை ஞானமார்க்கம் என்ற ஆகாச வெளியில் நீட்டிக் கொண்டிருந்தாலும், தங்கள் கால்களைப் பூமியிலேயே பதித்திருந்தார்கள். தாங்கள் பெற்ற ஞானத்தை, தங்கள் வாழ்க்கையை உலக மக்களுக்கு உய்விக்க பயன்படுத்தினார்கள். உலகோரும் பெறவேண்டும் என்று ஆற்றுபடுத்தியவர்கள் சித்தர்கள்.

வேதாந்த சித்தாந்த அறிவு பெற வேண்டுமானால் அவற்றிற்குரிய சாஸ்திரங்களைப் படித்து அறிந்து கொள்ளலாம். அநுபூதி வேண்டுமானால் மகான்களை நாடிச் செல்ல வேண்டும் அப்போது தான் அநுபூதி பெறமுடியும்.

யோகிகள் சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள் என்று

அழைக்கப்படுவோர் எல்லோரும் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களே இவர்களில் மூவகையான தன்மை கொண்டவர்களை நாம் உணரலாம்.

1. தம்முள்ளே கிடக்கும் தெய்வக் குறிப்பைக் கண்டு வெளிப்படுத்தாமல் மற்றவர்களைத் தம்மிடம் அனுக வொட்டாது மற்றவர்களின் பார்வைக்கு ஏளனமாய்க் காட்சி தருதல்.

2. அனைத்து உயிர்களும் முன்னேற அதிதீர ஆத்ம சாதனை செய்து ஞாலத்திற்கு யாவற்றையும் விட்டுச் செல்வர்.

3. மற்றவர்களுடன் நெறிங்கி பழகுவார்கள் பிறர் முன்னேற வழிசெய்ய மாட்டார் நெறிங்கி உள்ளவர்களின் குறைகளை ஆத்ம சக்தியால் போக்கிவிடுவர்.

வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்ற நான்கு துறைகளில் சித்தர்கள் ஆய்வு நடத்தியுள்ளனர். ஒவ்வொரு துறையிலும் முற்றிலுமாக இதற்கு அப்பால் இனியாரும் எதுவும் செய்ய முடியாது என்ற அளவு ஆராய்ந்துள்ளனர். வைத்தியம், வாதம், என்ற இரண்டும் இகவாழ்வு சார்புள்ளவை இவ்வுலக வாழ்வுக்கு இன்றியமையாதவை.

ஒரு செடி, கொடி, புல், பூண்டு என்று எதை எடுத்துக் கொண்டபோதிலும் அதன் ஒவ்வொரு பாகமும் எத்தகு வேதியல் தன்மை கொண்டதாய் உள்ளது. அது பசுமையாய் உள்ள போது இருக்கும் தன்மையும், அது உலர்ந்தபோது இருக்கும்

தன்மையும் என்ன? என்றும் அதன், இலை, பூ, காய், கனி, தண்டு, வேர் முதலிய ஒவ்வொரு பாகமும் எப்படி வேதியல் பொருளைக் கொண்டுள்ளது. அதன் உறுப்புகளில் ஒன்றுக்கொன்று மாறுபாடு உண்டா இல்லையா என்ற அனைத்தையும் ஆய்ந்து கண்டறிந்துள்ளனர்.

ஒரு பிராணியை எடுத்துக் கொண்டால் அதன் உடலில் உள்ள ஒவ்வொரு பாகத்தையும் பற்றி ஆய்ந்து முடிவு கண்டனர். பறவையாய் இருந்தால் எலும்பு, தசை, இறகு, கண், அலகு என்றும், விலங்கு என்றால் தோல், குளம்பு, கொம்புகள் உட்பட்ட எல்லா உறுப்புகளையும் பற்றி முழுவதுமாக சித்தர்கள் ஆய்வு செய்தனர்.

சித்தர்களின் நெறியை ஆராயும்போதுதான் ஆழ்ந்து சென்று சிந்தித்து அதன் பரிமாணங்களை அறிய முற்படும் போதுதான் அதன் உண்மை புலப்படும்.

சித்தர் வெண்பா என்னும் மருத்துவம் பற்றிய இந்நூல் ஒரு சுவடிப் பதிப்பாகும். சென்னை அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத்தில் எண் 1667 கொண்ட ஓலைச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டது.

நீதிக் கருத்துக்களையும், அறக் கருத்துக்களையும் பாட அமைந்த யாப்பு வடிவமான வெண்பா சித்தர்களால் உள்ளத்தைப் போற்றி வளர்க்கும் வழிகளையும், உடலைப் போற்றி வளர்க்கும் வழிகளையும் உடைய பாடல்களை தாங்கும் வாகனமாக வெண்பா யாப்பு அமைந்தது.

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ

நிலையாமை போன்ற வாழ்வில் பற்றற்ற உபாதைகளைக் கூறிய சித்தர்கள். உள்ளத்தை பன்படுத்த முயன்றனர். உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்றும் திருமூலரின் வாக்கிற்கினங்க உடலினை நோய் நொடியின்றி காக்கும் முறைகளையும் சித்தர்கள் கூறியுள்ளனர். இயற்கையில் முளைத்துள்ள செடி, கொடி, மரம் போன்ற தாவரங்களில் உண்டாகும் சாறுகளை உடல் நோய்தீர்க்கும் மருந்துகளாக கூறியுள்ளார்கள்.

சித்தர் வெண்பா என்னும் இந்நூல் மருத்துவம் பற்றியான நூலாக அமைகிறது. இந்நூலுள் நெல்லி கற்பம், வில்வ கற்பம், வெள்ளெருக்கு கற்பம், வெள்ளைக் குராய்க் கற்பம், பேய்த்திமிட்டி கற்பம், பேய்த்தும்பைக் கற்பம், நீர்முள்ளிக் கற்பம், பொற்றலை கையாந்தகரைக் கற்பம், கோடங்கிழங்கு கற்பம், ஊமத்தைக் கற்பம், ஐவனைக்-கற்பம், கொல்லன் கோவைக் கற்பம், ஆதளைக் கற்பம், கொன்றை கற்பம், வாலுவைக் கற்பம், நிலப்பனைக் கற்பம் முதலான உடல் நோய்தீர்க்கும் மருந்து பொருள்களைக் கூறி இம் மருந்துகளால் குணமாகும் நோய்களையும் கூறியுள்ளனர்.

நூல் குறிப்பு

சித்தர் வெண்பா என்னும் இம் மருத்துவ நூலானது நேரிசை வெண்பாவால் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலின் முடிவம் கொடக்கமாக அமைந்து அந்தாதித் தொடையாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு மருந்தின் தலைப்பின்கீழ் அவற்றை உபயோகிக்கும் முறைகள் கூறப்பட்டுள்ளன. மூன்று

ஓலைச் சுவடிகள் இன்னதென்று அறிய முடியாத நிலையில் உடைந்து கூலமாய்க் காணப்படுகிறது.

இந்த ஓலைச்சுவடி எந்தக் காலத்தில் எழுதப்பட்டது. ஆசிரியர் பெயர், அவருடைய ஊர், அவருடைய சமயம் பற்றிய குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் இச்சுவடிப் பாடல்களில் ஒருசில இடங்களில் (ஈசன்) சிவ பெருமானைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஆகையால் இவ்வாசிரியர் சைவ சமயத்தை சார்ந்தவராக இருத்தல் கூடும். மற்ற சுவடி நூலகங்களிலும் இச்சுவடி இருப்பதற்கான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

பதிப்புமுறை

முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவர் பொற்புலவர் - அன்னோர்
நடையிடையத் தம்வழியே நாட்டிமொழி மாற்றல்
கடையிடையர் மாட்டுவினை காண்.

(கலித்தொகை - பதிப்புரை)

என்னும் செய்யுளில் கூறியபடி சுவடிகளில் காண்பதைத் தம் விரும்பம் போல் திருத்துதல் பதிப்பாசிரியருக்கு உரிய செயலன்று. என்றாலும் சுவடிகளில் படியெடுப்போரால் நிகழ்ந்துள்ள பிழைகள் ஏராளம் காணப்படுகிறது என்பதை உணர்ந்து பதிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டிய கடமையும் பதிப்பாசிரியருக்கு உண்டு. சுவடிப் பதிப்பு திருத்தமானதாக, எளிமையாக எல்லாராலும் படித்து எளிதில்

புரிந்துகொள்ளும் வண்ணம் எளிமையானதாக உணரக் கூடியதாக அமைய வேண்டும் என்ற கருத்தோடு சுவடியில் சில சொற்களை மாற்றியுள்ளேன். ஏனெனில் அவை யாப்பிற்கு முறணாக தளை தடுமாறி நிற்கிறது.

இது மூல ஆசிரியரின் பிழை என்று கூற முடியாது. இச்சுவடியை மறுபடியும் மறுபடியும் ஓலையில் பெயர்த்தி எழுதியவர்களால் ஏற்பட்ட கவனக்குறைவே ஆகும். தளைக்கும், அசைக்கும் சீர்க்கும் ஏற்ப பொருத்தமாக சுவடியில் உள்ள வண்ணமே பதிப்பித்துள்ளேன்.

ஓலை பல்வேறு வீடுகளில் இன்னும் காணக் கிடைக்கிறது. அவைகளை அவர்கள் கொடுக்க முன்வர வேண்டும். ஓலையானாலும், காகிதமானாலும் எளிதில் அழியக்கூடிய பொருள்கள் ஏற்கனவே அவை மக்கிப்போன நிலையில்தான் அவர்களிடம் இருக்கக் கூடும்.

இப்படியான ஓலைச்சுவடிகளை இன்னும் அவர்களே வைத்திருந்தால் காலம் அவற்றை அழித்துவிடும். செல்லறித்துப்போன ஓலைகளையும், பிரித்தால் ஒடிந்து விழும் நிலையில் உள்ள காகித ஏடுகளையும் இனியும் அடைத்து வைக்க வேண்டாம். இவை அழிந்து போகாமல் காப்பாற்றுங்கள் என்று உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றியுரை

என்னை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்திய என் **தாய், தந்தைக்கும்,** தெய்வங்களாக என்னைக் காத்துவரும் என் முன்னோர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்லாற்றானும் நன்கு பயில்வதற்கு உறுதுணையாகவும், ஊக்கமும், பொருளுதவியும் அளித்து என்னை வாழவைத்து வரும் என் அக்கா **பா. மங்கலட்சுமி** அவர்களுக்கும், அண்ணன் **இரா. குமார், இரா. திருமூர்த்தி, தம்பி. இரா. ஜோதி** அவர்களுக்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சுவடியியல் துறையில் சுவடி எப்படி பதிப்பது எப்படி சுவடியை அனுகுவது பற்றியான அனைத்து தகவல்களையும் வழங்கிய எங்கள் துறைத் தலைவர் **முனைவர் வீ. அரசு** அவர்களுக்கும், சுவடியை படிப்பதற்கும் பதிப்பதற்குமான எழுத்துக்களை (சுவடி எழுத்துக்களை) கற்றுக்கொடுத்து நெறியாளராகவும் இருந்து என்னை சுவடி பதிப்பில் நெறிபடுத்தும் ஐயா **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்து மகிழ்கிறேன்.

இச்சுவடி பதிப்பில் எனக்கு சித்தர் வெண்பா என்னும் சுவடியை கொடுத்துதவிய சென்னைப் பல்கலைக்கழக அரசினர் கிழ்த்திசைச் சுவடி காப்பாளர் **சௌந்தர பாண்டியன்** அவர்களுக்கு நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் உருவாக்கத்திற்கு பல்லாற்றானும் உதவி புரிந்த என் விடுதி நண்பர்களுக்கும் குறிப்பாக **பெ.சுரேஷ், செல்வம், செல்வராஜ், ப. திருஞானசம்பந்தம், ராஜா, முத்தமிழ்மாறன்** உள்ளிட்ட அனைத்து நண்பர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிதை தெரிவித்து மகிழ்கிறேன்.

இந்நூலை சிறப்பான முறையில் உருவாக்கிக் கொடுத்த டுடே **கிராஃபிக்ஸ்** நிறுவனத்திற்கும் என் நன்றியை உரித்தாக்கி அகமகிழ்கிறேன்.

இரா. அன்பழகன்

சித்தர் வெண்பா

நெல்லி கற்பம்

நெல்லிமரப் பட்டை துவைத்துநீ ராறுபடி
நெல்லுக் குழிபுதைக்கு நீதிகேள் - நல்ல
வயக்கடமே நெய்தடவி யாட்டுத்தோல் சோச்ட்ச
வியக்குமொரு மண்டலத்தில் மேல். 1

மேலாந் தொழுப்புதைக்க வேர்த்தியில நாலிலொன்றாய்ப்
பாலாவி னெய்ப்படி யாகுமாங் - கோலான
தான்றிகடுக் காய்வேர்த் தயிலமு மப்படியோ
மூன்று பலத்திரைய மோர். 2

ஓரலக மோர்பல முந்திரிகை பேரீஞ்சு
தார்கொன்றை முப்பூ பலந்தானாஞ் - சேர்பதநேர்
பக்க மிருத்தி யெடுத்ததொரு பாக்களவு
நக்க நரைபோம்நாள் நூளில். 3

நூறு பணவிடை காந்தநோய்வா னிர்ட்டியதந்
நூறுநாள் கொளதிரைபோம் நோன்பிதென - நூறுநாள்
நெல்லிக் குழம்புகொண்டு நீங்கிப்பின் நூறுபண
மல்லுஞ்செந் தூரத் தடு. 4

அடுக்கடுக்காய்க் கொள்பவர்கட் கான்டொன்ற தன்னில்
மிடுக்கோ டிறுகா யமெங்கு - முடிக்கும்
படிபாலுண் வல்லார்க்குப் பாலனமா ரீசர்
அடியரில்மே லாகு மவர். 5

வாரமுட னெல்லிப்பூ மாதமுண்ண வல்லார்க்குத்
தீருமி லிங்கத்துத் தீயெரிப்புக் - கூர்மம்
ஒருகளஞ்சு மோர்கலந் துண்பக்க மூன்றில்
புரியுஞ் சலக்கழிச்சல் போம். 6

போக மிகவாகும் பூவுண்ண வல்லார்க்கு
ஆகந் தளராதப் பூவருத்த - மோகமறுங்
காய்த்திதையப் பூப்பொசிக்கக் கற்பூர வாசனையா
நோய்த்திதையம் போக்குங்காய் நீங்கு. 7

காய்ச்சா றதனை உயகடத்தி லேயடைத்து
வாய்ப்பாவின் கொட்டத்தில் வைத்தெடுத்துக் - கோப்பாம்
இருப்புப் பொடிபிசறி யேழுவிசை யூகி
உருக்கச்செம் பாமென் றுணர். 8

உணர்செம்பு தங்கமதி லொன்றவது செம்பாங்
குணர்தங்கச் செம்பதுவே கொள்ளத் - திணரு
நரைதிரை நீங்கியே நற்குமர னாவன்
சுரரினிய நெல்லிக்காய்ச் சொல். 9

சொல்லும் பருப்புவிரை தொக்குடனே தானுலத்தி
மல்லல் நிலத்தயிலம் வாங்கியே - சில்ல
மயிரிற் றடவமற் றைநாள்மூழ் கப்பின்
தயிரி லிவைவளருந் தார். 10

தாரமது போன்றமயிர் தானுங் கறுப்பாகும்
வாரமறிந் தேமூழ்கி மற்றாண்டில் - தீரக்
கறுக்குங் கரிதேட கரிப்பான் கரியில்
உறுக்கியரைத் தோர்கா சடைவுண். 11

உண்ணுந் தனித்தமில மோர்நாளில் தோளையிலை
நண்ணி யெரியிரத நாவுளதா - மெண்ணும்
விரையுட் பருப்பை விலங்கிட்டுக் கொண்டால்
நரையுந் தினக்கா சனாம். 12

வில்வக் கற்பம்

வில்வத்தை யாதிரைநாள் வெண்பட்டு நூல்கட்டி
வெல்லத்து டன்கனிநெய் வேத்தியமாய்ச் - சொல்லும்
வசிகரபஞ் சாக்கரமா மந்திரநூற் றெட்டுப்
பசுபதிவோ நற்குழிசம் பண். 13

பண்ணுங் குழிச முடிதரிக்கப் பட்சமதாய
நண்ணுநவ சித்திர நட்பாக்கி - யெண்ணும்
இரதத் தொழில்குளிகை யின்பாச சித்தி
விரதத் துடனுதவு வார். 14

வாரா முலையுமையு மானுமனு கூலமதாய்ச்
சேராக் கணவர்பெண் பாற்சிக்கும் - போராகிற்
சத்துருவுங் கைவசமாந் தாரணியில் மேலுமிவன்
சித்தன் மலையாதி ருத்தேர். 15

தேரிலையில் பற்பந் திலதமிட வேதாளங்
கூரிலைவேல் கொண்டுமுன் கூத்தாடுஞ் - சீரியதோர்
பாதாதி கேசமதிற் பற்பஞ் செயில்பூத
வேதாள மேதாகு மென். 16

ஏனம் வசீகரமா மிப்பூத் திலதமிட
யானை முறிச்சுண்டா டப்பலவ - மேனைப்பூ
வொன்றித் திலதமிட வோராண்டு பூவருந்தக்
கன்றுமூரோ மங்களுக்குங் காண். 17

கானுமலர் நெய்யருந்தக் காயமது பூரிக்கு
மானும் டழஞ்சதையை வாட்டுமே - யானியாம்
பட்டைத்தூள் கொள்ளவும் வாந்திபி ராந்தியறு
மட்டதாஞ் சோறுமத்தன் வாய். 18

வாய்ப்பா மரப்பட்டை மத்திக்கச் சட்டைபோங்
கோப்பான்டோ ளையிலை கொண்டுரசங் - காப்பாடும்
தங்கச்செம் பாகும் ரசபற்பந் தன்னினிலை
விங்குவிரை சிங்கிக்கா மெண். 19

எண்ணு மிரசவெள்ளி லிங்கத் திலைச்சாற்றில்
தின்றுவரச் சூதமுடல் சிக்குமே - மண்ணுலகில்
வெட்டரு மூலியதாம் வில்லமைந்துங் கொள்பவர்க்கு
மட்டரு வாயுவெகு வாம். 20

வெகுவாமி லைச்சாற்றில் வெந்தசட்டித் தூரில்த்
தகுமானைக் கண்மறைய வேதடவிப் - படுவா
அரவுதீன் டுங்கால மஞ்சனத்தைப் பிற்றி
இரவு தரித்திட வீசனாம். 21

ஈசனுடைக் கோவி லிருந்துபற்று மஞ்சனத்தைத்
தேசத்த னங்காட் சிறுபெண்கை - பூசிக்கொள்
ஆயிர சித்தியுட னட்டமா சித்தத்தின்
மேயுமொழி மெய்யாகு மே. 22

வெள்ளெருக்குக் கற்பம்

வெள்ளெருக்கை யாதித்த மூலத்தில் வெண்பட்டால்
உள்ளருத்திச் சாவற்கு டொன்றீய்ந்து - விள்ளு
இரவிமந்தி ரத்தால்நூற் றெட்டினால் மூலம்
விரவிய றேதெடுக்க வேர். 23

வேரிற் கணபதிசெய் வெள்ளிச் சிமிழ்பொதிந்து
தூரிற் கணபதியாற் சோடசமுஞ் - சீருற்ற
மந்திரத்தை யுச்சரிக்க வாய்க்கும் ரசகுளிகை
அந்தரத்தில் யோகசத்தி யாம். 24

ஆங்கெங் கணபதியென் றட்சரம்லட் சஞ்செபிக்கத்
தாங்கங்க மானாந் தனையெழுப்பு நீங்காமல்
பூவுண்ண வல்லார்க்குப் பூசரியாங் கேசரியாங்
காவலனாம் யோகரோடுங் காண். 25

ஒடுங்காத சுக்கிலமு முள்ளொடுங்கும் பூவுண்
நெடுங்காலங் கொண்டுவர நித்த - மடுஞ்சூத
உண்டுலகெ லாமறியு யோகியாங் காரணத்தைக்
கண்டுதெளி வாரிலையே காண். 26

காலைசெயித் தாளிருக்க கார்கடுப் பூவதனில்
வேலையிர தஞ்செயித்தல் வீசத்தால் - மாயென்று
அப்பிர கம்பால் செயிக்குநவச் சாரமதில்
வெப்பமயிர் பூசவெள்ளை யாம். 27

வெள்ளையாங் குட்டத்தில் மேல்பூசி யுட்கொள்ளக்
கள்ளம்போய் மேல்பங் கருக்குமே - விள்ள
சிரதத்தில் மதிக்க கயினமுண்டாம் பாபஞ்
சரத்ததில் வெள்ளைசெயுள் தான். 28

செய்யுமிலைச் சாறுவிட்டுச் சேர்தோளை யில்லெரிக்க
உய்யு மிரமுற்கை யோகத்தா - நொய்யபூப்
பட்டையுடன் மத்திக்கப் பாவகமாஞ் சிஞ்சுகமு
மிட்ட தனையதனி லே. 29

அதனின் விரையரைத்தே யாங்குலமேல் பூச்சி
சதன்குகை பூத்தாதின் சார்வாய்ப் - பதனப்
புடம்பதினா நாசியே போட்டெடுக்கப் பற்ப
முடம்புளநோய் கண்டோடு மே. 30

கண்டோடும் பற்பத்தைக் காற்குன்றி கொண்டுவர
வண்டோடு போல மயிர்கறுக்கும் - பண்டே
தொகுத்த விதத்தில் பாலுணவு சொன்னபடி கொண்டால்
மிகுத்துவமாம் யோகிகளு மேல். 31

வெள்ளைக் குராய்க் கற்பம்

வெள்ளைக்கு ராய்விரையை வெள்ளிப் பொடியோடுங்
கொள்ளவுடல் பூரிக்குங் கோநெய்யி - லுள்ளத்
தினவடங்கும் பூசவிலை தின்னப் புழுச்சா
மனமடங்குஞ் சுக்கிலத்தின் மால். 32

சுக்கிலமு மேனோர்க்குந் தொக்கிறு கும்பூவில்
மிக்கரசந் தானிறுகும் வேர்ப்பட்டை - முக்கியமாஞ்
சூதபுடம் போடச் சுரபிகுளி கைக்காகு
நீதிவிரை மிங்கிலிக்கா நேர். 33

பேய்த் திமிட்டிக் கற்பம்

பேய்த்திமிட்டி செய்வீரால் பேணிப் பிடுங்குங்கால
கார்த்திகை வீரனெழுத் தாற்கட்டி - போற்றி
ஏழுநாள் நீர்விட் டெழுகாத் திகைசெய்யில்
ஆழியாம் பேயகலு மாம். 34

ஆன விரையதனை யாவு னிரவுதனில்
வான நிலத்தயிலம் வாங்கிசிமில் - ஞானத்
திலத நுதலணியத் தேவரெல்லாந் தோன்று
மலகைபல தோன்றுமத னால். 35

ஆயிரங் கையுடையோன் கும்ப கலத்தில்தம்
பாயிரமா மீசனிலைப் பற்பத்தால் - பேயு
மழையைக் குடைகட் குமவரயில் வேருத்
தழையைமெண்ணு மீய்ப்பொழியுந் தான். 36

உந்தாதை பேர்சொல்லி யோதுமிந்த வேர்கிழிக்கச்
சிந்தா வருடலுஞ் சிந்துமே - பின்தான்
தயிலமது நாசித் தடவப் பிழைக்க
கயிலைவாழ் சித்தன் கரு. 37

கருவழிய வேண்டி விரைகருக்கித் தின்ன
உருவழிந்து நீராகி யோடுந் - திருவருளாய்
புத்திரர் தீபம் பொருந்துபொடி யுண்டானால்
பத்தியுடன் கொண்டிதனைப் பார். 38

பாரிரத மத்திக்கப் பஞ்சாங்க முஞ்சொல்லு
நீரனையுந் தோளையிலை நீதியதாம் - பேரியலாம்
பூதரதில் வேர்க்குகையாற் போடுபுடங் காடையென
வாதரிமேற் குக்கிடம தாய். 39

தாயாங் கிசபுடமேற் சங்கையிலா முட்டைதனிற்
ஈயாற்பு டம்போட்டுச் செய்வதெல்லாம் - மாயா
தனலைச் செபிக்க மாகுமே வீசங்
கனலைச் செயிப்பிக்குங் காண். 40

செயிக்கு மிரதபற்பஞ் செய்தியம னானை
செயித்துயிரை மீட்டுடலிற் சேர்ப்பார் - வெயிற்கதிரோன்
உள்ளளவு நிற்கு மொருவருடஞ் சூதபற்ப;
கொள்ளுமவர் வானோர் குரு. 41

குருவான வச்சிரமேற் கொள்தயிலம் பூசப்
பரிவாய்ப் புடம்பற் பமதாத் - தெரிவாகும்
ஆட்டவித லோக மடிக்கும் விரைத்தயிலந்
தொட்டுநக்கச் காயசித்தி சொல். 42

சித்திய னந்தவர்க்கே தின்னச் சடமிறுமுஞ்
சத்தியயத் தூசிநுனை தொட்டுண்ணப் - புத்தேளா
மோராண் டருந்துமவ ரோமங் கறுப்பதுவாஞ்
சீராண் டறிந்தே தொலை. 43

பேய் தும்பைக் கற்பம்

பேய்த்தும்பைச் சாரமதைப் பேசாதா ரென்னைவிளக்
கேத்திமைய வாங்கி படத்திலதஞ் - சாற்றிநுதல்
கண்டவரைக் கண்டே கலங்குங் குமரகண்டன்
பண்டைநீதி காட்டும்பெண் பால். 44

பாலாவின் கோரோச மைபதித்துப் பொட்டிட்டால்
சேராத வர்களுமெய் சேருமே - போராகிற்
சீந்திநீர் கூட்டித் திலதமிட்டுச் சென்றக்கால்
சாய்ந்திடுமே மாற்றான் தளம். 45

தளமா பினலவாட்டித் தாந்திரிய தாக்கி
இளமா தகத்தில் விளக்கேத்தி - யுளமார்
கனவகத்தில் பேய்த்தோற்றங் கண்டவரைக் காணார்
நனவகத்தில் நன்மைவரு நாள். 46

நாள்மூன்றிற் கட்டுமே நல்வீர சிங்கிலியாம்
ஏழுமூன் றுதிரமிலை காயத்துக் - கோளுமூன்றி
பச்சை யிரதமதிற் பாதிவெள்ளி சேர்த்தரைத்து
மெச்சிவிரை யாற்புடஞ்செய் வேம். 47

வேடிக்கை யான முருங்கை விரைத்தயில
நாடிச்சாய் செம்புவெள்ளி நற்குளிகை - கூடித்
தெசவேத சாரமாஞ் சேர்தாரம் பாதி
அசைத்தாராம் பால்வெள்ளி யாம். 48

ஆனவெள்ளி தன்னி லதிற்பாதி சீவனமாம்
ஞானமுள்ள காயசித்தி நற்பா - யினமில்லாப்
பிள்ளைக்குஞ் சொல்லாதே சொல்லிற் பெரும்பிழைகான்
உள்ளத் துளதா யுணர். 49

உணரிற்பால் வெள்ளிதனைப் பற்பஞ்செய் துண்டாற்
பணருசந்தி ராதித்தப் பற்பங் - குணருமோர்
ஓர்குன் றிரண்டுகுன்றி மூன்றுகுன்றி கொண்டாற்
சாருங்கான் மூன்றிதனிற் றான். 50

தானா வலையாது தந்தமுளைக் குங்களுக்குங்
கோனா வுடலுங் குளிருமே - யானா
அனுப்பான மிச்சாற்றி லாகுமே யென்றார்
தனைச்சார்ந் திரதமுரைத் தான். 51

நீர்முள்ளிக் கற்பம்

நீர்முள்ளி நீரதனில் நேர்ந்து சுவேதனைசெய்
ஓர்முள் ளிவிசமதி லோர்நெகிழஞ் - சேதிரத
மெண்ணான்க தாம்புடத்தி லீது வலித்திறுகு
மன்னன் தளம்செயிக்க வாம். 52

வாளைப்பூ வெந்திரத்தில் வீசமடைத் தேபலிய
வேளையிலை வாட்டிச்சா நீங்கடைத்துச் - சூழு
நடுவிர தம்விட்டு நற்பூவா யேந்தி
இடுபுடமேற் சட்டியினி லே. 53

இனிய கவுசட்டிப் பூனுழைய வேந்தி
முனியுங்க ருங்கனல்முப் பான்கடிகை - தனிலே
அடிக்குகையில் வீழ்ந்திரத மய்யறுப் பாகும்
எடுப்பளவி லேயிறுகு மென். 54

இறுகுமொரு மண்டலத்தி லிட்டதெல்லாந் தின்னும்
உறுதிபெறுங் காயததை யுண்ணுஞ் - செறிவைத்து
அப்பிரகச் சத்துண்ணு மட்டவித லோகமுண்ணுந்
செப்புக்கட் டாங்குளிகைச் சீர். 55

சீரம் விடமருந் துந்தேன ருந்துங்கள்
பூரம் பொலவருந்தும் புகழாகு - நாரியர்பாற்
ஊர மிரையருந்துஞ் சுக்கிலமும் பட்சிக்குங்
காரியத்தைப் பொன்னாங்குங் காண். 56

பொற்றலைக் கையாந்தகரைக் கற்பம்

பொற்றலைக்கை யாந்தகரை பொற்காப்புக் கட்டுபொன்னின்
பொற்பாகும் புக்களஞ்சு பொற்பொடியில் - நித்தியமும்
குன்றியிடை கொள்ளக் குமரவ னாகுவ
மன்றுதனுப் பொன்னிறம் போலாம். 57

போலாக் கருந்தனவும் பொன்னிறமாம் ரோமமது
சேலாய் வெளிறிச் சிவக்குமே - பாலான
தஞ்சங்கம் பொன்னோ டருந்தத் தனுவிருந்
தஞ்ச மொருவருடந் தான். 58

தானாங்க தும்புகொள்ளச் சந்த்தமு மிப்படியே
வேனோ ருடல்கருப்பா மென்னவே - கோனான
செங்கொட்டை தன்னிற் செனித்தகறுப் பாமிதுவே
தாங்கிட்டில் வெள்ளைக்க றுப்பாம். 59

கறுப்பாந் திலதமிடுங் கரிக்கூட்டிக் கொள்ள
வெறுப்ப நரைகறுக்கும் வேரி - லுறுப்பாம்
ஒருவருட மூன்றுண்ண ரோமங் கறுக்குந்
தெரிவாய்க் கரிப்பான்றன் சீர். 60

சீரமன்ன முண்ணத் திரைபோய் நரைநீக்கும்
கூரிய தாமிரதங் கூட்டியே - யாரியன்போல்
ஆக்குமிந்த மூலிபொன்றி லன்பாம் புடம்போட்டுச்
சேர்க்கும்வர்க் குண்டாந் திரு. 61

திருந்தியசெந் தூரந் தினமூன் றுகுன்றி
அருந்தில் நரைதிரைபோ மாறில் - மருந்தெல்லா
மொன்றிலே சாதிக்க வோராண்டில் நீங்காமல்
தின்றார் சிந்திக்குந் தேன். 62

தேனிலே செந்தூரந் தின்னச் சடமிறுகு
மானெய்யிற் காய மழகுதரு - மூனிலே
பற்றும் படிகையாந் தகரை பகர்ந்தபடி
நற்றியுண்ணுந் தானவனே நாம். 63

நாமகளுங் கைவசமா நாகவிட மேறாது
சாவதில்லை நித்தியமுந் தப்ாது - தாமு
முருங்கைப் பிசினோடுண் முத்திவெகு வாகுஞ்
சுருங்க விடைநீங்கிச் செல். 64

கோடங்கிழங்கு கற்பம்

கோடங் கிழங்குநீர் கொண்டிரத மத்தித்துக்
காழகொண்டு தாலைம்பி கப்பறையில் - மூடிவெயில்
வைத்தெடுத்து முப்பா னிப்படியே மத்திக்க
பெத்த தனல்செயிக்கும் பின். 65

பின்னிரத சிங்கியினிற் பெட்டியதே யுள்ளடைத்தே
உண்ணுங் கிழங்கதனி லுள்வைத்து - மன்னியதாய்ச்
சீலைமண்ணைச் செய்து தெறுகுகையில் வைத்தூத
ஏலு மிரதகுளி கையென். 66

கையெனும் வங்கமதிற் காய்ச்சியிந்த நீர்சரித்தே
உய்யவுருக் கிக்குளிகை யுள்ளிட்டுச் - செய்ய
விருப்பவலை கூட்டார்த் தேகிவிழும் முன்னே
தரிப்பாஞ் சுரபிகுளி கைதான். 67

தாரமாம் வங்கந் தனைப்பாதி தன்மத்திற்
சேரவே நாலிலொன்று சித்தர்க்கா - மூரின்மேற்
ஏசாந்த மாகத் திரிந்தருந்தக் கைவசம்
காசாசை விட்டாற் கதி. 68

கதியாங் குளிகை கதுப்பிருக்கக் காயம்
புதிதாய்ப் புதிதாய்ப் புதிதாய்ப் - பதிதாவும்
இந்திரன் சாப மிதற்குண்டா முண்டானார்
தந்திரமென் றேயுரைத்தார் சார். 69

சாப மகன்றிடங் கோர்ந்தான லட்சமுருக்
கோபமில்லா துச்சரித்துக் கொண்டக்கால் - சாபம்போம்
என்றான் குருந்தன் னியல்பை யறிந்துணர்ந்து
நின்றார்க் கிவைபலிக்கு நேர். 70

ஊமத்தை கற்பம்

கூலத் துமூல முருக்குவித்துச் சித்திரையாங்
கோலமணிப் பூக்குனி ரபூசம் - ஞாலமதில்
அத்தமே தோலா மனுடமிலை யாகும்பொன்
மத்தையார் செய்யு மயக்கு. 71

விற்றுக்கு வித்தாகும் வேருக்கு வேர்வையா
முற்றதொரு பூவுக் குமிளநிரா - மற்றதொரு
தோலுக்குத் தீரமாமி லைக்குச் சிறுநீரா
பாலுக்கு மாமிம் மருந்து. 72

ஐவனைக் கற்பம்

ஐவனைப் பூக்களஞ்சு ஆனெய்யி லாண்டருந்தக்
கைவண்ணக் கண்சிவக்கக் கண்டுதான் - மெய்சிவக்க
வேர்த்தயிலங் கொண்டதனால் மேனிபசும் பொன்னாகு
மேற்றிலையால் ரோமம்வொ துப்பெண். 73

என்னுமதிற் பட்டை யிடித்துத்தே னிற்கொள்ளத்
தன்னுடலம் பச்சை குழைத்தால - வண்ணமெலாந்
தாறுமாறென் னுஞ்சத் தியவா ணிதானமே
கூறினா ளீசுவரி மெய்கேள் 74

கேளாக விந்திரன்தான் கூறிய மாலவனைக்
கேளா யவனகுரு கட்டியே - யாளாகி
இப்ப ரிசியானு மேறவேனு மென்றுரைக்க
தப்பியுரைத் தான்பஞ்சத் தான். 75

பஞ்சவான் யோகியொரு பச்சிலைபச் சோந்தியதா
அஞ்சியுழு தானிதனை யாயுங்கால் - நெஞ்சுகத்தே
வாயுவினால் வந்ததென வண்ணம் பலவேது
காயச்சிற் பெற்றான் கலி. 76

கலியுகத்தில் தேவாண்டு காலம்போய் நீல
மலியுஞ் சலத்தைநீக் கியாக்கின் - நலியுளது
சூதத் துடனருந்த தோஷமென்னா னீசுவரி
சாதிக்க வாறுரைக்கத் தான். 77

கர்த்தாவின் சூதந் தயிலமதி லேகாச்சிப்
பத்தானாட் பட்டை படவரைத்துக் - கொத்தாய
பூவிற் புடம்பத்துப் போட்டிலையு மப்படியே
காவிவிலங் கிட்டிரதங் கட்டு. 78

கட்டும்பூச் சாற்றிலே கற்பூர நான்முகன்
தொட்டுதட விப்படுக்கச் சுக்கிலந்தான் - மட்டாகச்
சென்னியி லேற்றலாஞ் சித்தரச மிப்படியே
தின்னவிடில் தம்பனையாச் சென். 79

கொல்லன் கோவைக் கற்பம்

கொல்லன்கோ வையெனவே கூறிடு ஞாமந்தான்
சொல்லுங்கோ தென்பாகத் தூரெடுத்து - மெல்ல
நறுக்கி நிழலுலர்த்தி நற்கிழங்கின் நூழைச்
சிறுக்கிசிறு நீருடன் தின். 80

தின்னுந் தினங்கழஞ்சு செண்பகப்பூ நாற்றமதா
முன்னியொரு மண்டலந்தா னுண்ணவே - நன்னுதலா
ஆறுதிங்க டன்னி லரவு கடித்தால்சாம்
நூறுசன்னி வாதநொறுக் கும். 81

குமரனா மாண்டிரண்டில் கோமனா மூன்றில்
திமிரமது நாலில் செகமனைத் தமர்கன்று
தூர்விழி யஞ்சதனிற் றூரந் தெரியுமது
மேருவுடல் வேண்டாகு மே. 82

வேண்டாகு மாறதனில் விண்ணெழுப்பு மெய்யெழிச்
சாம்பவ சித்தமா யோகிகளைக் - கண்டதான்
பங்குக் குழைத்து பகர்ந்தவ னையுகந்து
அங்குந்து வாவொன்ப தாம். 83

நோன்பாய மண்ட லங்காப்ப லிப்பதனால்

வான்பாயு குணங்கண்டே வாழ்த்திநாள் - போந்தேகேள்

ஆகாச மாங்கெருட னென்றே பறைந்தான

சாகாக்கொல் லன்கோவை தான். 84

தாயாகுந் தந்தையுமாய்த் தாங்குஞ் சுவாமியதா

பேயா திருபெருஞ் செப்பினான் - காயால்

கிழங்குளி ரத்ததைக் கிண்டி யடைத்தேய்

அழங்குபுட முப்பதுவைப் பாம். 85

வைத்திறு குஞ்சூத மன்றுக்கு மாயாது

சித்த ரசகுளிகை செய்யவே - பெத்தமாங்

காயக்கி லேசாங் கடப்பர் குளிகையினால்

மாயச்சி னங்கடத்து வார். 86

ஆதளைக் கற்பம்

ஆதளைப் பட்டைதனை யாவின்பால் காசளவில்

ஏதமிலொன் பாலுண் ணேவிடம்போந் - தாதரைத்துப்

பூசல் புடைப்பகலும் புண்தீரும் பத்திரத்தி

ஊசமிலை பாலோடு மோர். 87

ஒட்டும்பால் நாளத் துடன்தடவி யேபுணரத்
தேட்டமாய் மங்கையருஞ் சிக்குமே - வாட்டத்
தரைக்குக்கீ ழிப்பாலை யாரத் தடவப்
பரிக்கடமை யோர்தினமென் பார். 88

பாரா அயங்காய்ச்சி பல்லா லெடுப்பதுநீ
சீரா மெனவிரையுங் தின்னவே - நீராட
வேர்முகந்து யோகி விடியுமுன்னேதான் மூழ்கு
மோர்முகந் தன்யா மினி. 89

இனிந்திரியப் பாலதனை யெள்ளனவா யேத்திக்
கனிந்தனைக் காசிடையா யுண்ணத் - தினந்தினமுங்
கொண்டா னொருவருஷம் கூச்சம் யிராங்கதனை
கண்டேயோ ராண்டருந்துங் காய். 90

காயாம்பூ வண்ணமதாய்க் காயங் கறுக்குமயிர்
சாயாநி மிந்தெழும்பத் தான்கண்டு - தோயா
மினிந்திரியென் றேபேரை யிந்திரனு மோதக்
கனிந்தெவருஞ் சித்திபெற்றார் காண். 91

பெத்தயத்தைக் காச்சிப் பெருகுமிலை நீர்தோய்க்கச்
சத்துவமாய் நூறுவிசை சாய்க்கவே - சுத்தரசம்
பத்திதனைக் கூடுமியம் பத்திலென்று சூதமிடச்
சுத்திதருந் தாரமதாஞ் சொல். 92

சொல்லுமிலை நீரால்சு வேதனத்தி லேழுநாட்
செல்லமல நீங்கித் தெளியுமே - நல்லிரதம்
பட்டையினால் மத்திச்சுப் பாதனையில் வைத்தேழு
சட்டையெல்லா நீங்கிவிடுந் தான். 93

தாதுவினில் பாலதனால் மத்தித்து வைக்கவதில்
ஈதுசெய்பூ வுக்கபத்த மெய்துமே - யோது
நவதா ணியங்கா டிநாடி யம்பல்
உவமாகு செங்கதிராப் பாம். 94

ஒப்பான பட்டை குகையதனி லுள்வைத்து
மெப்பான வீசம் விலங்கிட்டு - வைப்பாம்
புழங்கிரம மாகவே போட்டுமுப்பான் தன்னில்
எழுங்குளிகை தம்பனைக்கா மே. 95

தம்பனைக் காவதெல்லாங் காயசித்தி தானாகும்
விம்மிவிழுந் சுக்கிலமு மேனோக்குஞ் - செம்மையின்
இந்திரியக் கற்ப மியம்பினோ மெல்லோர்க்குந்
தந்திர முண்டாந் தனு. 96

கொன்றை கற்பம்

கொன்றைக் கொழுந்தனைக் கொண்டுவரச் சுக்கிலமு
நன்றதாய் மேனோக்கு நற்பூவைத் - தின்றவர்க்குக்
காய மிகவிறு குங்காக மென்விளங்கிக்
காயில் மயிர்கறுக்குங் காண். 97

கறுக்கும் பழச்சதையால் காலனையு மீட்டுஞ்
சிறக்கவிரை கொள்ளத் திருவாம் - பிரிக்கு
மிலைச்சா றதனி விரதம் வலியுங்
குலைப்போடும் பட்டைக் குணம். 98

குணமாந் தயிலங் குமரகண்டன் போர்க்கும்
பணமாம் புணர்போகம் மண்ணும் - துணையாகும்
போரிற் புரிவார்க்குப் பூத்தே னமுதமுமாம்
வேரிற் பலனா மிவை. 99

இவையெடுப் பத்திங்க ளேழிலாதி ரையில்
அவைகராப் புக்கட்டி வேர - நவமாய்க்
குழிசமாய்க் காட்டிமுடி கொண்டிருக்க மாத்தான்
சழிவனொரு வன்றனக்குத் தான். 100

தானாயும் பொற்பூவைத் தான்களஞ்சு மண்டலங்கொள்
தீராவி யாதியெலாந் தீருமே - நேரா
தொருவருவுங் கொண்டார்க்கு ரோமங் கறுக்குந்
தருவ திருவருந் தான். 101

தாரான கொன்றை யிருத்தி டலோர்குன்றி
சேரா வதற்கே திலமளவா - யாராய்த்
தொருவருடங் கொண்ட லுடல்தங்க மாகு
இருவருடங் காயசித்தி யென். 102

சித்திக்கு மத்தனையுஞ் சென்ம வலைநீங்கும்
சத்திசுனே ணித்ததான் தார்கொன்றை - நீத்தியலும்
பூசிமுடித் துண்டு புணரத் துணையாகு
நேசித்தான் வைத்த நெறி. 103

நெறிபோ மரவு மவனிழலைத் தீண்டில்
முறிவா முவரிவிட மீள்கச் - செறிவாய்
அருந்தியே கொண்டிடத் தானப்பூச் சென்னி
இருந்தா லொருபே ரிடு. 104

இடும்பேர் கடுக்கையென வீசனுரைத் தானா
மடும்போ திலைநீரி லாகும் - படும்போது
பட்டையினால் மத்திப் பழப்பிசினிற் சிங்கிலிசேய்
எட்டுமுட்டை யாதியதா மென். 105

என்னுங் குளிகைதனி லிந்திரநீ லங்கொடுக்கத்
தன்னுடலச் சம்புக் கினிபோலாம் - மன்னியதோர்
கெந்தக மேவியிடிற் கேடிலாப் பொன்னிறிமாஞ்
சந்திரனாம் வெண்கனகத் தால். 106

தாலம் புகழ்காந்தம் தானருந்து நற்குளிகைய்
ஆலம் பழம்போல வாடுமே - ஞானமதில்
அத்தயிலத் தாலே யிரன்மகி மைதன்னைப்
பெற்றவரே யீசனென்றும் பேர். 107

வாலுழுவைக் கற்பம்

வாலுழுவைக் கற்கடக மந்தன் வளர்பிறையில்
ஏலுந் சதுத்தசிபொற் காப்பிட்டுக் - கோலமதால்
நாமகள் மந்திரநூற் றெட்டு நவிற்றியபின்
பாமகள்சொந் நேத்திரமும் பன். 108

பன்னும் பருவப் பழமெடுத்துப் பாலாச
நன்னுங் கனிசிக்க ரைநெய்வேர் யுண்ணவதின்
வீசு முதலத்தி வெயில்வெங்க லத்தில்
நேசத்த தயிலம்வாங் குநேர். 109

நிலப்பனைக் கற்பம்

நிலப்பனையை மூலம்ந்த நீலநாள்தண் ணீரில்
புலப்புகரு நூல்காப்புக் கட்டிக் - கொலக்கனியைக்
காந்தமெடுத் தொட்டிலே காண்ணுளதி லேழரி
வேந்ததைக்கா ராம்பசுநெய் யில். 110

நெய்விளக்கை மையேற்றி நீல மடந்தையிடத்
தைய்தடவிப் பார்க்கக் களவுதொழில் - செய்வதெல்லாம்
வைத்தவிடம் வாய்ந்தவிட மாய்ந்து நொறுங்கினது
முத்தவிடஞ் சொல்வா ளுணர். 111

உலத்தியதைச் செம்புதனி லுள்ளடைத்துப் போகஞ்
செலுத்தக் கழஞ்சுபொடி தின்ன - வலுத்துவிளாப்
போகிக்க விட்டபொடிப் பெண்ணுக் கருத்துங்கால்
போகிப்பா ளாணழியு முன். 112

முன்னின் கிழங்கனிர்த்து மூர்ச்சை ரதமடைத்தே
மன்னும் புடமுப்பான் வற்றாக்கிச் - சொன்னபடி
செய்குளிகை தம்பனை யாந்திரி போகிக்கு
மையடக்கி டத்தம்ப மாம். 113

காந்த கற்பம்

கலவந் திரிகுய் குழிவியாண் குய்யஞ்
சொல்லு மிதமான சுக்கிலஞ் - சொல்லும்
உபாசமீ ரொன்பா னுமைவீசங் கட்டுந்
தவமுனியுந் தேவனுந் தான். 114

மூலிகை பொதுவகை

இரதச மூந்தி லிராசிய மூன்றுண்
டுரமதுணர் வோற்கொளிதாம் யோகந் - திரமாய்
மணிமந்திரம்வாயு வாய்க்குமுர முன்
எணிகலடி யில்மூன்று ரசமாம். 115

உவரசமா ராசமுண் ணமமாசத் தோடு
தவரசமூன் றாகித் தழைக்கு - நவரசமா
மாணிக்க மட்டவித லோக மகாமூலி
ஏணியுமை வீசநூற் றெட்டு. 116

அப்பிரகங் காந்தமுட னானவக்கீ ராந்தஞ்
செப்புமரி தாரஞ் சிலைகெந்த - மொப்பரிய
ராசாவர்த் தஞ்சிங்கி கற்கரவி தோட்டியுடன்
பேசா வுபரசத்தின் பேர். 117

ஆனதொரு துத்தந் துரிசஞ்ச னக்கலத்
தானதருங் கவுரிவெள்ளை சாதிலிங்கம் - கோனதிர
மாட்சி நிமலையொடு மாரசங்க ளெட்டாகு
மாட்சியுமை வீசத் திலாம். 118

மாணிக்க முத்து மரகத நீலமணில
ஆணிவயி ரம்புருட ராகமுடன் - பூணும்
பவழங் கோமே தகம்பற் பராக
மவன்தான்சு தோணிதத்தி லாம் 119

லோகங்க ளெட்டு முமையினுடை வீரியத்தான்
தாகங்.... தனித்துரை - யோகங்கான்
தங்கம்பொன் தாரமிமை தாம்பிரமி ரும்புடன்
வங்கமிரண் டாய்ந்தென் வகை. 120

எல்லையிலா மூலியினி வேற்றுமுள்ள மாமூலி
சொல்லித் தொகுத்தபடி சோதித்தே - நல்லோர்
எழுபத்து மூன்றா மியம்புகின்ற மூலிக்
குழுவைத் தொகுத்துறைப்போங் கொள். 121

பண்ணம் புலியருக்கா பத்துவிதி நாற்பாலா
நுண்ணுமுக மைந்துசிவ னாட்டமவ - னெண்ணுந்
திரிமூர்த்தி யோடுபல தெய்வீக மூலி
செறிகீர்த்தி யாமூலி செப்பு. 122

வில்வமுடன் வெள்ளெருக்கு வெண்குராய் பேய்த்திமுட்டி
கொல்லும் பெருந்தும்பை குன்றியுட - னல்ல
பழுபாகல் நேர்வாளம் பாங்காம் பேயத்
தழுவாத செங்கொட்டை தான். 123

பலாசுகரூ மத்துப் பருந்தான்றி கார்பூப்
பொலிசெயுவாய் வேளைப்பு டோற்பொய் - மலிசை
கருஞ்சீ ரகமுடனே காணும்பு னமூலி
நெருங்கி ரிரதபற்ப நேர். 124

செங்கள்ளி யொட்டிலாச் செங்கொடி வேலியுடன்
தங்கந்த லைச்சூடி சங்கபற்ப - மங்கா
சமுத்திராச் சோகிமணி தக்காளி மேனி
யமுக்கிரா முத்துருக்க னாம். 125

ஓரிதட் டாமரையி னோடுவெரு கற்கிழங்கு
காரு கரும்பூனை காலியுட - னேரா
யிரதாங் குசமவிரை யேகதெய்வ தானி
திரமாஞ் சசிபெந்தத் தேர். 126

வல்லாரை விட்டுனு வட்டத் திரும்பியெட்டி
கல்லாத மூவிலைபொன் னான்கரந்தை - நல்லதொரு
சித்தமுட்டி பேமுட்டி சிற்புள் ளடிகேஞ்சா
...த்து சுக்கிலபெந் தத்தரம். 127

அழுகண்ணி யச்சடை யாடுதின்னாப் பாளை
தழுவியபுத் திற்சா றனையு - நழுவியதோர்
செப்புநெ ருஞ்சி திருவடித் தேவியிலை
யப்புரச பெந்தத்தி லாம். 128

கலப்பை கடுக்காய்பொற் கையாந் தகரை
நிலப்பனைகோ டங்கிழங்கு நீர்முள் - ளிலக்காகும்
பங்கமுட னட்டதிக்கும் பாலரிலை தன்னைத்
தங்களாட செந்தூரத் தாம். 129

ஆதளை வாலுவை யைவனைகொல் லங்கோவை
மாதளைபூங் கொன்றைசிவன் வான்முகமா - நீதி
இரதசுத்தி மத்தித்தல் தோளாந் திரத்தில்
சரதவிதங் கட்டிவிக்குந் தான். 130

சோதியு ரோமஞ் சுவர்னவி ருட்சநய
மீதுபற்பஞ் செந்தூரத் தேற்குமிவை - நீதியா
மங்கோல மீரதன்போ லாக்கு மிரதசித்தி
தங்கோல முன்டாருந் தான். 131

தொட்டாற் பசபசக்குஞ் சோதிமி குத்தமூலி
மட்டாரு தாற்ற மகாமூலி - கட்டா
இரதத்தைக் கட்டிவிக்கும்ரேகவலு விக்கும்
பரதத் துவமூவர் பால். 132

திருஞானம்பிகை சகாயம் குருபாபாதமே கதி - சிவா.

சொல்லடைவு

	பா.எ		
அச்சடை	128	ஆயிரம்	22
அஞ்சியுழு	76	ஆயுங்கால்	76
அட்சரம்	25	ஆரசங்கள்	118
அட்டு	55	ஆராய்ந்து	102
அடியம்பல்	94	ஆரியன்	61
அப்பிரகம்	117	ஆலட்பழம்	107
அயங்காச்சி	89	ஆவின்பால்	87
அரவு	21	ஆழி	34
அரிதாரம்	117	ஆறுதிங்கள்	81
அலகை	35	ஆனெய்	73
அவள்	119	இட்டிரதம்	78
அழகு	63	இதர சித்தி	131
அழங்குபுடம்	85	இந்திரன்	69
அழுகண்ணி	128	இந்திரிய கற்பம்	96
அனந்தவர்	43	இயம்பு	121
ஆடுதின்னாப் பாளை	128	இயல்பு	70
ஆணழி	112	இரண்டு	50
ஆதளைபட்டை	87	இரதகுளிகை	66
ஆதிரைநாள்	13		

இரதமுறை	51
இரவி மந்திரம்	23
இரும்பு	120
இரையருந்தும்	56
இலைச்சார்	98
இளநீர்	72
இளமாதர்	46
ஈசர்	5
ஈசுவரி	74
உடல்கறுப்பு	59
உடல் தங்கமாதல்	102
உணர்செம்பு	9
உணர் தங்கம்	37
உபசாரம்	117
உபாசம்	114
உமை	120
உயகடம்	8
உருக்கல்	8
உலகெலாம்	26
உலத்தல்	112
உவரசம்	116
உள்ளம்	32
உறுப்பு	60
ஊசமிலை	87
ஊனல்	115
எட்டு	120
எடுப்பளவி	54
எண்ணான்கு	52
எழுங்குளிகை	95
எழுபத்துமூன்று	121
எல்லை	121
ஏவி	106
ஏழுநாள்	34
ஏழுவிசை	8
ஏற்றிலை	73
ஏனம்	17
ஏனோர்	96
ஐந்து	112
ஐவணைப்பூ	73
ஒடுங்காத	26
ஒப்பானப் பட்டை	95
ஓத்தி	90

ஓர்ந்தான்	70
ஓராண்டு	90
ஓரிதழ்	126
கட்டிவிக்கும்	57
கட்டு	57
கட்டும்பூ	79
கட்டி	34
கடப்பர்	86
கடித்தல்	81
கடுக்காய்	2
கண்மறைய	21
கண்டவரை	44
கண்சிவக்க	73
கண்டுதெளி	26
கண்டோடும்	30
கணங்கண்டு	84
கணபதி	24
கணவர்	15
கதி	68
கதுப்பிருக்க	69
கயிலை	37
கர்த்தா	78
கராப்பு	100
கரிக்கூட்டி	60
கரிதோட்	11
கரிப்பான்	11
கரியில்	11
கரு	37
கருக்கும்	28
கருஞ்சீரகம்	124
கருத்த	58
கரும்பூனை	126
கருமத்து	124
கருவழிய	38
கல்லாத	127
கலங்கும்	44
கலப்பை	1
கலி	76
கலியுகம்	77
கவிட்டபொடி	112
கவுசட்டி	54
கவுரி வெள்ளை	118

கடிஞ்சுபொடி	112	காந்த நோய்	4
கள்ளம்	28	காப்பு	84
களஞ்சு	6	காப்புக்கட்டி	110
களவு தொழில்	111	காய்ச்சாற்	8
கற்கடகம்	108	காய்ச்சி	67
கற்காவி	117	காய்த்திதை	7
கற்பூரம்	1	காயசித்தி	101
கறுக்குமயிர்	91	காயக்கிலேசம்	86
கறுப்பாகும்	11	காயம்	55
கன்றுமூரோ	17	காயால்	85
கனவகம்	46	காயாம்பூ	91
கனிந்தனை	90	காயமெங்கும்	5
கனிநெய்	13	கார்	27
காசம்	34	கார்த்திகை	34
காசாசை	68	கார்பூ	124
காசளவி	87	காரணம்	26
காசிடை	90	காராம்பசு	110
காட்டும்	44	காரியம்	56
காடை	39	காரு	126
காணி	17	காலம்	77
காந்தம்	110	காலன்	98

காலை 27
காவலன் 25
காவிலங்கு 78
காழகொண்டு 65
காற்குன்றி 31
கானார் 46
கானுமலர் 18
கிட்டில் 59
கிண்டி 85
கிராந்தம் 117
கிழங்கு 85
குக்கிடம் 39
குகையதனில் 95
குட்டத்தில் 28
குடைகள் 36
கும்பகலம் 36
குமாரகண்டன் 44
குமரவன் 57
குய்ய 126
குரு 41
குருந்தன் 70
குலை 98
குவி 57
குழிவியான் 114
குளிகை 14
குளிரும் 51
குன்றிசேர் 102
குனிர 71
கூச்சம் 90
கூட்டம் 67
கூட்டி 48
கூடுமிம் 92
கூத்தாடும் 16
கூர்மை 6
கூரிய 61
கூரிலைவேல் 16
கூலம் 71
கூலமதாய் 15
கெந்தகம் 106
கெருடன் 84
கேசரி 25

கேடிலாப்பெண்	106	கோமான்	82
கேளாக	75	கோமேதகம்	119
கையாந்தகரை	63	கோரோசனம்	45
கையுடையோன்	36	கோல்	2
கையெனும்	67	கோலமணிப்பூ	71
கைவசம்	15	கோலமதால்	108
கைவண்ணம்	73	கோவில்	22
கொட்டம்	8	கோவை	80
கொண்டான்	90	கோளுமூன்றி	47
கொத்தாய்	78	கோளதிர	118
கொல்லன்	80	கோனான்	59
கொல்லும்	1	கோனாவுடல்	51
கொலக்கனி	110	சக்கரைநெய்	109
கொழுந்து	97	சங்கம்	58
கொள்பவர்	5	சங்கை	40
கொன்றை	97	சட்டி	53
கோடாங்கிழங்கு	65	சட்டை	93
கோதென்பாகம்	80	சட்டைபோம்	19
கோப்பாம்	8	சடமிருகும்	63
கோப்பான்	19	சத்தியவாணி	24
கோபமில்லா	70	சளத்திசுளேன்	103

சத்துரு	15	சாய்ந்திடும்	45
சத்துவம்	92	சாயா	91
சத்தோடு	1	சார்	69
சதன்குகை	30	சார்வாய்	30
சதுர்த்தசி	108	சாரமதை	44
சந்த்தம்	59	சாருங்கன்	50
சந்திரன்	106	சாவதில்லை	64
சந்திராதித்தம்	50	சாவற்சூடு	23
சம்புக்கினி	106	சாற்றில்	20
சரதத்தில்	28	சாற்றிநுதல்	44
சரித்து	70	சிக்கும்	88
சலக்கழிச்சல்	6	சிஞ்சுகம்	29
சலத்தை	77	சித்தன்	15
சன்னிவாதம்	81	சித்தரசம்	79
சாகா	84	சித்தர்கா	68
சாதிக்க	77	சித்தி	14
சாதிலிங்கம்	118	சித்திரை	71
சாந்தம்	68	சித்திமூட்டல்	127
சாபம்	69	சிந்தாவருடல்	37
சாம்பவ	83	சிந்திக்கும்	62
சாயக்க	92	சிமில்	35

சிரதத்தில்	28	சூதபுடம்	33
சிவக்கும்	58	சூதமுடல்	20
சிவன்	122	சூரரினியர்	9
சிலைகெந்தகம்	117	சூழும்	53
சிறுநீர்	72	செங்கதிர்	94
சிறுபெண்கை	22	செங்கள்ளி	125
சீர்	60	செங்கொட்டை	59
சீராண்டு	43	செங்கொடி	125
சீரம்	56	செந்தூரம்	4
சீரியதோர்	16	செந்நேந்திரம்	108
சீலைமண்	66	செப்பு	128
சீவனம்	49	செம்பு	8
சீழிப்பாலை	88	செய்தி	4
சுக்கிலம்	26	செய்யுமிலை	29
சுத்தரசம்	92	செய்குளிகை	113
சுத்தி	92	செய்யூ	94
சுரபிகுளிகை	33	செயித்துயிரை	41
சுரோணிதம்	119	செலுத்த	112
சுவாமி	88	சென்பகப்பூ	81
சுவேதனம்	93	சென்மவலை	103
சூதந்தியிலம்	78	சென்னி	79

செறி	55
செறிகீர்த்தி	122
சேர்த்தரைத்தல்	47
சேராதவர்	48
சேதிரதம்	52
சேலாய்	58
சொல்	93
சொன்னபடி	31
சோடசம்	24
சோதித்து	121
சோறுமத்தன்	18
ஞாமம்	80
ஞாலம்	71
ஞானம்	35
தங்கச்செம்பு	19
தங்கப்பொன்	120
தங்கோலம்	131
தடவி	88
தண்ணீர்	110
தந்திரம்	96
தந்தையுமாய்	85
தப்பாது	68
தம்பனை	79
தமர்கன்று	82
தயிர்	10
தயிலம்	99
தார்	10
தரிப்பாம்	67
தலைச்சூடி	125
தவமுனி	114
தவரசம்	116
தழஞ்சதை	18
தழுவாத	123
தழை	116
தளம்	52
தன்னுடலம்	74
தனித்துறை	120
தாது	94
தாம்பிரம்	120
தாமரை	126
தாய்	39
தார்கொன்றை	3

தாரணி	15
தாரம்	11
தாலம்	107
தாலைம்பிகப்பறை	65
தாற்ற	132
தாறுமார்	74
தானிதிரம்	126
திருவருள்	38
திரை	4
திலதநுதல்	35
திலதமிடல்	16
திண்றார்	62
தினக்காசனம்	12
தினக்கழஞ்சு	81
தினவு	32
தீபம்	38
தீயெரிப்பு	6
தீரா	101
துணை	99
துத்தம்	118
தும்பு	89
தூசிநுணை	43
தூர்விழி	82
தூரில்	21
தூரெடுத்தல்	80
தெசவேதசாரம்	48
தெரி	60
தெய்வம்	126
தேசத்தனம்	22
தேட்டமாய்	88
தேர்	15
தேரிலை	16
தேவராண்டு	77
தேவர்	35
தேழு	93
தேன்	62
தேவன்	114
தொக்கு	10
தொகுத்தல்	121
தொலை	43
தொழு	2
நக்க	42

நட்பு 14
நண்ணி 12
நண்ணுங்கனி 109
நண்ணுமுகம் 122
நயனம் 131
நரை 3
நரைதிரை 9
நல்லிரதம் பட்டை 93
நல்லோர் 121
நவச்சாரம் 27
நவச்சித்திரம் 14
நவதாணியங்கள் 94
நற்கிழங்கு 80
நற்குமரர் 9
நற்குழிசம் 13
நற்குளிகை 48
நற்பா 49
நற்பூ 97
நாகவிடம் 64
நாசி 30
நாடிச்சாய் 48
நாமகள் 64
நாரியர் 56
நாள் 46
நாற்றம் 81
நான்முகன் 79
நிலத்தயிலம் 10
நிலப்பனை 110
நிமலை 118
நிழல் 104
நீங்குதல் 25
நீதி 1
நீதிவிரை 33
நீர்முள்ளி 52
நீராடல் 89
நீராறுபடி 1
நீலம் 111
நூல் 13
நூழை 80
நூற்றெட்டு 13
நூறுவிசை 92
நெகிழம் 52

நெஞ்சுகம் 76
நெடுங்காலம் 26
நெய் 1
நெய்விளக்கு 111
நெல்லிக்காய் 9
நெல்லிக்குழம்பு 4
நெல்லிப்பூ 6
நெல்லிமரம் 1
நெல்லுக்குழி 1
நெறி 103
நேசத்தயிலம் 109
நேர்ந்து 52
நேர்வாளம் 103
நொறுக்கு 81
நோய்த்திதையம் 7
நோன்பு 84
பகர்ந்தவன் 83
பகுவாய் 21
பச்சிலை 76
பச்சோந்தி 76
பசபசக்கும் 132
பசுபதி 13
பசும்பொன் 73
பஞ்சத்தான் 75
பஞ்சாக்கரம் 13
பஞ்சாங்கம் 39
பட்சம் 56
பட்டை 98
பட்டைத்தூள் 18
படிபால் 5
பண் 13
பண்டைநீதி 44
பணம் 99
பணவிடை 4
பத்தி 92
பத்திரம் 87
பதனப்புடம் 30
பரதத்து மூவர் 132
பரிக்கடமை 88
பரிசியான் 75
பருப்பு 12
பருப்புவிரை 10

பருவப்பழம்	109
பல்	89
பலம்	3
பலத்திரை	2
பலாக	124
பழச்சதை	98
பழவம்	119
பழுபாகல்	123
பறைந்தான்	84
பன்னம்	122
பாக்களவு	3
பாகு	54
பாசம்	14
பாதனை	93
பாதாதி கேசம்	16
பாதி	68
பாபம்	28
பாமகள்	108
பாயிரம்	36
பாரிரதம்	39
பால்	72
பால்வெள்ளி	48
பாலாவி	2
பாலுணவு	31
பாவகம்	29
பிசறி	8
பிசின்	108
பிடுங்கு	34
பிரகசம்	55
பிரகம்பு	27
புகழ்காந்தம்	107
புடங்கிரமம்	95
புடைப்பகல்	87
புணர்போகம்	99
புத்திரர்	38
புத்தேளாம்	43
புதிதாய்	69
புருடராகம்	119
புலியருக்கா	122
புனமூலி	124
பூக்கழஞ்சு	57
பூச்சி	30

பூசம்	71	பேரியல்	39
பூசாரி	25	பொட்டிட்டால்	45
பூசவிலை	32	பொன்	56
பூத்தாது	30	பொற்காப்பு	57
பூத்தேனம்	99	பொற்பூ	101
பூதரதில்	39	பொற்றலை	57
பூதவேதாளம்	16	பொன்னான் கரந்தை	127
பூரம்	56	பொன்னிறம்	57
பூரி	18	போகிப்பாள்	112
பூவருந்த	7	போதிலைநீர்	108
பூனுழை	54	போரிடு	104
பெட்டி	66	போற்றி	34
பெண்	73	மகாமூலி	116
பெத்தனல்	65	மகிமை	107
பெருகுமிலை	92	மங்கையர்	88
பெருந்தும்பை	123	மங்கோலம்	131
பெற்றவர்	107	மஞ்சனம்	21
பேமுட்டி	127	மட்டவிதலோகம்	116
பேய்த்தும்பை	44	மட்டாரு	132
பேய்த்திமிட்டி	34	மடந்தை	111
பேரீஞ்சு	3	மடுஞ்சூதம்	26

மண்டலம் 1
மண்ணுலகம் 20
மணிமந்திரம் 115
மத்திக்க 28
மத்தையார் 71
மத்திப்பழம் 105
மந்தன் 108
மந்திரம் 13
மயிர் 10
மரகத நீலமணி 119
மரப்பட்டை 1
மல்லல் 10
மழை 36
மன்னன் 52
மனம் 32
மாட்சி 118
மாணிக்கம் 119
மாதம் 6
மாதளைபூ 130
மாயச்சினம் 86
மாயாதனல் 40
மாலவன் 75
மாற்றான் 45
மிகுத்துவம் 31
மிடுக்கு 5
மிதம் 114
முகம் 89
முட்டை 46
முடிதரித்தல் 14
முத்தி 64
முத்து 119
முந்திரிகை 3
முப்பது 85
முப்பான் 54
முருக்கு வித்து 71
முருங்கை பிசின் 64
முலையுமை 15
முள்ளொடு 26
முளைத்தல் 51
முறிவாழுவரி 104
முன்றில் 6
மூடி 65

மூவிலை	127	வர்க்குண்டம்	61
மூர்ச்சை	113	வர்சனை	7
மூலம்	71	வருடம்	58
மூலி	20	வல்லாரை	127
மூழ்க	10	வலி	98
மெச்சிவிரை	47	வளர்பிறை	108
மெய்சிவக்க	73	வாட்டல்	18
மெய்கேள்	74	வாய்ப்பாமரம்	19
மேருவுடல்	82	வாயு	20
மேனி	73	வாரம்	20
மையேற்றி	111	வாலுமுவை	108
மோகம்	7	வாழைப்பூ	54
மோர்	6	வானவிருட்சம்	131
வங்கம்	67	வானோர்	41
வகை	120	விங்குவிரை	19
வச்சிரம்	42	விசம்	52
வசீகரம்	13	விட்டுனு	127
வண்ணம்	74	விண்ணெழுப்பு	83
வண்டு	31	வித்து	72
வயக்கடம்	1	வியாதி	101
வயிரம்	119	விரதம்	14

விருப்பவலை	67	வேத்தியம்	13
விரை	12	வேதாளம்	16
வில்வம்	13	வேந்திமுனி	54
விலங்கிட்டு	12	வேர்	72
விளக்கு	46	வேர்த்தயிலம்	2
வீசங்கனல்	40	வேர்வை	72
வீசம்	28	வேளையிலை	53
வீரியம்	120	யந்தரத்தில்	24
வெங்கலம்	109	யமன்	41
வெண்கனகம்	106	யவனகுரு	75
வெண்பட்டு	13	யாட்டுத்தோல்	1
வெந்திரம்	53	யானை	17
வெப்பமயிர்	27	யூகி	8
வெயில்	65	யோகம்	120
வெயிற்கதிர்	41	ரசபற்பம்	19
வெருகங்கிழங்கு	126	ரசவெள்ளி	20
வெல்லும்	13	ராசாவர்த்தம்	117
வெள்ளி	24	ரேகவலி	132
வெள்ளெருக்கு	23	ரோமம்	43
வெள்ளைக்குராய்	32	லட்சம்	25
வெளிறி	58	லிங்கம்	6
		லோகம்	42

முதற்குறிப்புஅகராதி

	ப-பா.எ
அடுக்கடுக்காய்	2-5
அதனின்	8-30
அப்பிரகங்காந்தம்	30-117
அமுகண்ணி	33-128
ஆங்கெங்கணபதி	7-25
ஆதளைப் பட்டை	22-87
ஆதளை வாலுவை	33-130
ஆயிரங் கையு	10-136
ஆனதொரு துத்தம்	30-118
ஆனவிரை	9-35
ஆன வெள்ளி	13-49
இடும்பேர் கடுக்கை	27-105
இரதசமுந்தி	29-115
இவையெடுப்ப	26-100
இறுகுமொரு	14-55
இனிந்திரிய	23-90
இனிய கவுசட்டி	14-54
ஈசனுடைக்கோவில்	6-22
உண்ணும்	4-12
உணர் செம்பு	3-9
உணரின் பால்	13-50
உந்தாதை	10-37
உலத்தி	29-112
உவரசமா ராசம்	30-116
எண்ணும் ரசவெள்ளி	6-20
எல்லையிலா மூலி	31-121
என்னுங் குளிகை	27-106
என்னு மதிற்பட்டை	19-74
ஏனம்	5-17
ஐவனைப்பூக்களஞ்சு	19-73
ஒட்டும் பால்	23-88
ஒடுங்காத	7-26
ஒப்பான	24-95
ஓரலகம்	1-3
ஓரிதழ் தாமரை	32-126
கட்டும் பூச் சாற்றில்	20-79
கண்டோடும்	8-31
கதியாங் குளிகை	18-69
கர்த்தாவின் சூதம்	20-78

கருவழிய 10-38
கலப்பை கடுக்காய் 33-129
கலவந்திரிகுய் 29-114
கலியுகம் 20-77
கறுக்கும் 25-98
கறுப்பு 16-60
காய்ச்சார் 3-8
காயாம்பு வண்ணம் 23-91
காலை 7-27
கானுமலர் 5-18
குணமாந்தயிலம் 25-99
குமரன் 21-82
குருவான வச்சிரம் 11-42
கூலத்து மூலமுருக்கு 18-71
கேளாக இந்திரன் 19-75
கையெனும் வங்கமதிற்17-67
கொன்றைக் கொழுந்து25-97
கோடங் கிழங்கு 17-65
சாபமகன்றிட 18-70
சித்திக்கு மத்தனையும்26-103
சித்தியனந்தவர் 11-43
சீரம் விடமருந்து 15-56
சீரமென்ன 16-61
சுக்கிலம் 9-33
செங்கள்ளி 32-125
செய்யுமிலைச் சாறு 8-29
செயிக்குமிரதம் 11-41
சொல்லும் பருப்பு விரை3-10
சொல்லுமிலை நீர் 24-93
சோதி 33-131
தம்பனைக் காவது 25-96
தளம் 12-46
தாதுவில் 24-94
தாயகுந்த தந்தையுமாய்22-85
தாயாங்குசம் 11-40
தாரமது 3-11
தாரமாம் வங்கம் 18-68
தாரான கொற்றை 26-102
தாலம் புகழ்காந்தம் 27-107
தானாயும் பொற்பூவை26-101
தானா வலையாது 13-51

திருந்திய செந்தூரம் 16-62
தின்னுந் தினக்கழஞ்சு 21-81
தேரிலை 5-16
தேனிலே செந்தூரம் 16-63
தொட்டாற் பசபசக்கும்34-132
நாமகள் 17-64
நாள் மூன்று 12-47
நிலப்பனை 28-10
நீர்முள்ளி 14-52
நூறு பணவிடை 2-4
நெய்விளக்கு 28-111
நெல்லி மரப்படைட்டை 1-1
நெறிபோ மரவு 27-104
நோன்பாய மண்டலம் 22-84
பஞ்சவான் யோகி 20-76
பண்ணம் புலியருக்கா30-122
பண்ணும் 4-14
பலாசு 32-124
பன்னும்பருவப்பழம் 28-109
பாரா அயங்காய்ச்சி 23-89
பாரிரதம் 10-39
பாலாவின் 12-45
பின்னிரதம் 17-66
பெத்தயத்தை காச்சி 24-92
பேய்த் திமிட்டி 9-34
பேய்த்தும்பை 12-44
பொற்றலை 15-57
போகம் 2-7
போலா 15-58
மாணிக்கமுத்து 30-119
முன்னின் கிழங்கு 29-113
மேலாந் தொழுபுதை 1-2
லோகங்கள் எட்டும் 31-120
வல்லாரை 32-127
வாய்ப்பா மரப்பட்டை 5-19
வாரம் 2-6
வாராமுலை 4-15
வாலுமுவைக் கற்கடகம் 2 8 - 108
வாளைப்பூ 14-53
வில்வம் 4-13
வில்வமுடன் 31-12

விற்றுக்கு வித்து	19-72
வெகுவாமிலை	6-21
வெள்ளெருக்கு	6-23
வெள்ளைக் குராய்	9-32
வெள்ளையாங்குட்டம்	8-28
வேடிக்கை	13-48
வேரிற் கணபதி	7-24
வைத்திருகும்	22-86

துணைநூற்பட்டியல்

1. யோக ஞான சாஸ்திரத் திரட்டு - எஸ்.பி. ராமச்சந்திரன்
2. ஈழத்துச் சித்தர்க்ள - நா.முத்தையா
3. சித்த நெறி - ஏ.ஆர். சாரங்கபாணி
4. திருமூலர் திருமந்திரம் வைத்தியம் 1000
   - எஸ்.பி. ராமச்சந்திரன்
5. தமிழ்ச் சித்தர் மரபு - டி.என். கணபதி
6. சித்தர் இலக்கியம் - மீ.ப. சோமு